REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The Official Organ Of The D.P.F.

மலர் 3] சென்னை: ஆனி 32உ சனி (16—7—55) ★ ★ வெளியூர்: ஆடி 1உ ஞாயிறு (17—7—55) [இதழ் 28

இலங்கையில் குடி உரிமை மறுக்கப்பட்ட திராவிடரின் எண்ணிக்கை

சென்ற 1952-ல் இலங்கைக் குடியுரிமைச் சட்டம் இயற்றப்பட்டது முதற்கொண்டு, இலங்கை சர்க்கார், 1,43,469 இலங்கை இந்தியர்களின் மனுக்களை நிராகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்தக் கணக்கு 1955 மே திங்கள் முடியவுள்ள காலம் வரைக்கும் எடுக்கப்பட்டதாகும் என்றும், நிராகரிக்கப்பட்ட இம் மனுக்கள் போக, மொத்தம் 33,581 பேருக்கு மட்டுமே இலங்கைக்

(4-ம் பக்கம் பார்க்கவும்)

'காமராசர் சர்க்காரின் கோழைத்தனம்!'

'முன்வைத்த காலைப் பின்வைத்ததேன்?'

'ஐந்தாறு பார்ப்பனர் குரலுக்கு மதிப்பு— பல்லாயிரம் திராவிடர் குரலுக்கு அவமதிப்பா?'

சென்னை மும்முனைப் போராட்ட நினைவு நாளில் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் முழக்கம்

"தீண்டாமையை இந்த நாட்டில் வலியுறுத்திக் கடைப்பிடிப்பது எந்த மத வைதிகம்?—கிறித்துவ மத வைதிகமா? முகம்மதிய மத வைதிகமா? இந்து மத வைதிகமா?—இந்து மத வைதிகம்தானே, இங்கு தீண்டாமையை வலியுறுத்திக் கடைப்பிடித்து ஒழுகக் கூறுகிறது?

"வைதிகத்திற்கு சில அடையாளங்கள் உண்டல்லவா? தீண்டாமையை வலியுறுத்தும் இந்து மத வைதிகத்திற்கு என்ன அடையாளங்கள்?—உச்சிக்குடுமி, பஞ்சகச்சம், பட்டை, பூநூல் இவைதானே! இந்த அடையாளங்கள், இந்து மத வைதிகத்தைக் குறிக்குமே தவிர, ஒரு குறிப்பிட்ட வகுப்பாரை—பார்ப்பனரை மட்டுமா குறிக்கும்?

"இந்த அடையாளங்களுடன் கூடிய வைதிக வெறியர்களாக—பார்ப்பனரல்லாத தேசிகர்கள், கோமுட்டி செட்டியார்கள், நாயுடுக்கள், தச்ச, கொல்ல ஆசாரிகள் இந்த நாட்டில் இல்லையா? அப்படி ஒரு வைதிகக் கோலத்தை—வைதிகப் பிம்பத்தைத் தங்களை மட்டும்தான் குறிப்பதாக பார்ப்பனர்கள் ஏன் எண்ணிக்கொள்ள வேண்டும்? அப்படியானால், 'இந்த வைதிகக் கோலத்திலிருப்பவர்கள் அத்தனை பேரும் பார்ப்பனர்கள்தான்,' என்பதிலும் பார்ப்பனத் தலைவர்கள் ஏற்றுக்கொள்கிறார்களா?

"வைதிகப் பிம்பம் ஒன்று 'தாழ்த்தப்பட்டவன்—தீண்டப்படாதவன்.' என்று கருதப்படுகிற ஒரு பிம்பத்தைப் பார்த்து 'அருகில் வாராதே' என்று கூறுவது போலவும், 'அப்படிக் கூறினால் இந்திய அரசியல் சட்டத்தின் 17-வது பிரிவின்படி சிறைத் தண்டனை கிடைக்கும்' என்றும் தீட்டப்பட்ட சுவரொட்டிகளை, சர்க்கார், அறுபதாயிரத்திற்கும் அதிகமாக அச்சடித்திருக்கிறார்கள்; பல இடங்களில் ஒட்டியுமிருக்கிறார்கள்; ஆனால், ஐந்தாறு பார்ப்பனர்கள், திருச்சியிலே கூடி, 'துக்கநாள் கொண்டாடுவோம்,' என்று கூறியவுடன், காமராசர் சர்க்கார், 'அச்சுவரொட்டிகளை இனி ஒட்டவேண்டாம்,' என்று, முன்வைத்த காலைப் பின்னுக்கு இழுத்துக் கொண்டிருக்கின்றனர்.

"காமராசர் சர்க்காரின் இந்தச் செய்கை எதைக் காட்டுகிறது? சர்க்கார், முதலில் இப்படி சுவரொட்டிகள் தயாரிப்பானேன்? பின் அவற்றை ஒட்டாமல் நிறுத்துவானேன்?

"தான் செய்கிற வேறு எத்தனையோ காரியங்களுக்கு எதிர்ப்பு ஏற்பட்டால் அதை எதிர்த்து வாதாடுகிற இம்மாநில சர்க்கார், தாங்கள் தயாரித்த சுவரொட்டிகளுக்கு எதிராக எழுப்பப்பட்ட குரலுக்கு எதிராக ஏன் வாதாட முன்வரவில்லை?

"'நாங்கள் தயாரித்த சுவரொட்டிகள், எந்த ஒரு வகுப்பையும் குறிப்பிடுவது அல்ல; இந்த நாட்டில் தீண்டாமையை ஒழிக்கவேண்டிய சட்டம் இயற்றப்பட்டிருக்கிறது; அந்தச் சட்டத்தை மக்களுக்கு விளக்கியாகவேண்டும்; அதற்காக இந்த நாட்டில், தீண்டாமையை வற்புறுத்துகிற இந்துமத வைதிகத்தின் பிம்பம்தான் சுவரொட்டியில் இடம்பெற்றிருக்கிறது; அந்த பிம்பம் தங்களைப் பிரதிபலிக்கிறது என்று யாராவது ஒரு வகுப்பார் எண்ணிக்கொண்டால், அதற்கு நாங்கள் பொறுப்பாளிகள் ஆகமாட்டோம்,' என்று, தாங்கள் வெளியிட்ட சுவரொட்டிகள் சார்பாக வாதாடுகிற தைரியம், காமராசர் சர்க்காருக்கு ஏன் இல்லை?

"கோழைத்தனமாக, அச்சடித்த சுவரொட்டிகளை ஒட்டாமல், நிறுத்தி வைப்பானேன்? அச்சடிக்கிற துணிவு பெற்றிருந்த அரசாங்கம், ஐந்தாறு பார்ப்பனத் தலைவர்கள் 'துக்க நாள் கொண்டாடுவோம்,' என்று கூறியதும் தொடை நடுங்கிப் போவானேன்?

"இதனால் தான்—காமராசர் சர்க்காரின் இந்தக் கோழைத்தனத்தினால்தான், 'காமராசர் சர்க்கார் (காமராசர் அல்ல—காமராசர் ஆண் என்பது தெரிந்துதானே இருக்கிறது.) ஆணா, பெண்ணா, அலியா—என்பது தெரியாமலிருந்தது முன்பு: இப்போது, அவர் ஆணுமல்ல—அலியுமல்ல—பெண் என்பது தெரிந்துவிட்டது,' என்று, அண்ணா அவர்கள் கூறினார்கள் நல்ல உபமானத்துடன்!

(தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க.)

டாக்டர் கான் சாகிப்

எல்லைப்புற முதலமைச்சராக பதவி ஏற்பார்?

மேற்கு பாகிஸ்தானை ஒரே உறுப்பாக்கும் திட்டத்தை சர்தார் ரஷீத் தொடர்ந்து எதிர்த்து வருவாரானால், எல்லைப்புற மாநில முதலமைச்சர் பதவியை டாக்டர் கான்சாகிப் ஏற்றுக்கொள்வார் என்று தெரிவிக்கப்படுகிறது.

டாக்டர் கான்சாகிபை எல்லை மாநில முதலமைச்சராக நியமித்தால் கபார்கானின் எதிர்ப்பைச் சமாளிக்க முடியும் என்றும் கருதப்படுகிறதாம்.

'டால்மியாபுரம்' அமைதியாக 'கல்லக்குடி'யாயிற்று!

மும்முனைப் போராட்ட நினைவு நாள் நிகழ்ச்சி

தி. மு. கழக பொதுச் செயலாளர் அவர்களின் அறிக்கைக்கு இணங்க, 'டால்மியாபுரம்' பெயர் மாற்றப் போராட்ட அறிகுறியாக, இன்று காலை 9 மணிக்கு கல்லக்குடி தி. மு. கழக அலுவலகத்திலிருந்து, குளித்தலை தோழர் தி. வி. முத்துகிருஷ்ணன் தலைமையில், தோழர்கள் க. முத்து (கவண்டம்பட்டி) ரெத்தினம் (பல்லவபுரம்), பெரியதம்பி (கீழப்பழூர்), அன்னப்பன் (புதூர்பாளையம்) ஆகியோர் பின் தொடர, ஊர்வலமாகப் புறப்பட்டு, 500-க்கு மேற்பட்ட மக்கள் பின்தொடர, இன முழக்கம் செய்துகொண்டு, 9-20 மணிக்கு டால்மியாபுரம் புகைவண்டி நிலையத்திற்குள் சென்று, அங்குள்ள எல்லா இரயில்வே பெயர்ப் பலகைகளிலும் 'கல்லக்குடி' என்று அச்சிட்ட தாளை ஒட்டினர்கள்.

'வடநாட்டு ஏகாதிபத்தியம் ஒழிக,' 'திராவிட நாடு திராவிடருக்கே,' என்ற ஒலிகளை முழக்கினர். பின்னர், அங்கு குழுமியிருந்த தொண்டர்கள் இனமுழக்கம் செய்துகொண்டு கழக அலுவலகத்திற்கு 11 மணியளவிற்கு வந்து சேர்ந்தனர்.

ஊர்வலத்தையும், சுவரொட்டிகள் ஒட்டுவதையும் நல்ல முறையில் நடத்துவதற்கு திருச்சி மாவட்ட செயலாளர் அம்பில் தர்மலிங்கமும், துணைச் செயலாளர் ஜி. பராங்குசமும் 14-ந் தேதி இரவே கல்லக்குடி வந்து சேர்ந்தனர். இரயில்வே நிலையத்தில் அவர்களை கல்லக்குடி செயலாளர் தோழர் எ. தம்புசாமி வரவேற்றார்.

போராட்டத்தைக் கண்காணிப்பதற்காக 14-ந் தேதியன்றே ஏராளமான ரிசர்வ் போலீசார் வரவழைக்கப்பட்டிருந்தனர்.

அன்று மாலை 6 மணிக்கு கல்லக்குடி பிள்ளையார் கோவிலுக்கு அருகில் மாபெரும் பொதுக் கூட்டம் நடைபெற்றது. (பொதுக் கூட்ட செய்திகள் நாளை வெளிவரும்.

போலீசாருடன் மோதிய சந்நியாசிகள்!

கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டனர்!

பகலேபாபா உட்பட பலருக்குச் சிறை வாசம்

கட்டாக், ஜுலை 15—

கடந்த ஜுலை திங்களில் இந்நகரை அடுத்து இருக்கும் கலிய போதா மடத்தில் இருந்த சாமியார்களுக்கும்—போலீசாருக்கும் இடையே நடைபெற்ற கைகலப்பின் விளைவாகக் கைது செய்யப்பட்ட எண்பது வயதான அந்த மடத்தின் தலைவர் பகலே பாபாவுக்கும், இதாருக்கும், கட்டாக் 'செஷன்ஸ்' நீதிபதியான ஜெய கிருஷ்ண மிஸ்ரா என்பவர், இரண்டு குற்றங்களுக்காக தனித் தனியேமுறையே இரண்டு ஆண்டு, ஓராண்டு சாதாரண சிறைத் தண்டனை தந்து தீர்ப்பு வழங்கியிருப்பதாகத் தெரிகிறது.

ஒரு கிரிமினல் வழக்கு சம்மந்தமாகத் தேடப்பட்டுவந்த சிலரைக் கைது செய்வதற்காக அந்த மடத்திற்குச் சென்ற போலீசாரை, மடத்திலிருந்த சந்நியாசிகள் தாக்க முற்பட்டதினால் கலவரம் ஏற்பட்டது. பின்னர், கண்ணீர்புகை குண்டுகளுடன் ஒரிசா இராணுவப் போலீசார் சென்று பகலே பாபா, மற்றும் பைராகிபாபாஎன்பவரையும், 18 வயதுப் பெண் உட்பட எட்டுப் பெண்கள்—18 ஆண்களையும் கைது செய்தனர்.

இராணுவப் போலீசார்—சந்நியாசிகள் மோதுதலின் விளைவாக இரு சந்நியாசிகளும், ஒரு போலீஸ்காரரும் கொல்லப்பட்டனர். மடத்திலிருந்து ஏராளமான ஆயுதங்களும் பறிமுதல் செய்யப்பட்டன.

பைரேகி தாஸ் என்ற பகலேபாபாவின் வலக்கரம் என்று கருதப்படுபவருக்கு, இரண்டு குற்றங்களுக்காக இரண்டு ஆண்டு கடுங்காவல் சிறைத் தண்டனையும், வேறொரு குற்றத்திற்காக, 7 ஆண்டு கடுங்காவல் தண்டனையும் தரப்பட்டிருக்கிறது.

மற்றும் ஏழு பேர்களுக்கு ஒன்று முதல் நான்காண்டுகள் வரை பல வகையான சிறைத் தண்டனை தரப்பட்டிருக்கிறது; ஐவர் விடுதலை செய்யப்பட்டனர்.

திட்டப் பகுதிகளில் கள்ளுக் கடைகள்!

பக்ரா-நங்கல், சித்தரஞ்சன் அருகில் இருக்கின்றனவாம்

மதுவிலக்கு விசாரணைக் குழு தரும் தகவல்

மதுவகையில் விரையமாவது 150 கோடி ரூபாயாம்!

"நமது நாட்டில் ஒவ்வொரு ஆண்டிலும் மது வகையில் விரயமாக்கப்படும் தொகை ரூ. 150 கோடி; இந்தத் தொகையைக் கொண்டு தொழிலாளர்களுக்கு 3 லட்சம் வீடுகள் கட்டிக் கொடுக்கலாம்—60 லட்சம் குழந்தைகளுக்குக் கல்வி வசதி அளிக்கலாம்."

"சர்க்கார் நடத்தி வருகின்ற பெரும் பெரும் திட்டங்களுக்கு அருகிலேயே கள்ளுக் கடைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன, இது மிகவும் வருந்தத்தக்கதாகும். பக்ரா-நங்கல் திட்டத்திற்குப் பக்கத்திலும், சித்தரஞ்சன் எஞ்சின் தொழிற்சாலைக்கு அருகிலும் இத்தகைய கள்ளுக் கடைகள் இருக்கின்றன. அவற்றை உடனடியாக ஒழிக்க வேண்டும்."

—இவ்வாறு, நாடு முழுமையிலும், வருகிற 1958-ஏப்ரல் திங்கள் முதல் முழு மதுவிலக்கும் அமுல் நடத்தப்பட வேண்டுமென்றும், மது விலக்கு அமுலின் விளைவாக ஏற்படக்கூடிய நஷ்டங்களைச் சர்க்கார் பொருட்படுத்தாமல் பூரண அமுல் நடத்துவதற்கான கண்டிப்பான பூர்வாங்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டு மது விலக்கு விசாரணைக் குழு, தான் வெளியிட்டுள்ள இடைக்கால அறிக்கை ஒன்றில் தெரிவித்திருக்கிறது.

"முதல் முறையாகச் செய்யப்படும் மதுவிலக்குக் குற்றத்திற்கு

(4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு
தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 16—7—'55 சனி

பாராட்டுரையும், பாதகச் செயலும்!

" இப்பள்ளிப் பெயரின் நினைவுக்குக் காரணகர்த்தாவான தமிழ்ப் பெரியார் திரு. வி. க. அவர்கள் சமத்துவத்திற்கு ஒரு எடுத்துக்காட்டாவார். அவர் போதித்த அன்பு நெறி—சமத்துவ நெறி என்றென்றும் நிலைத்திருக்க வேண்டும்."

★

" தமிழ்ப் பெரியார் திரு. வி. க. அவர்களே ஒரு கலைக்களஞ்சியம் ஆவார். அவரது நாட்டுப் பணியும், தியாகமும் எவராலும், என்றென்றும் மறக்க முடியாதனவாகும். மாணவர்கள் அவரையே தங்களுக்கு ஒரு எடுத்துக்காட்டாகக் கொண்டு நல்லொழுக்கமுடையவர்களாகத் திகழ வேண்டும்."

★

" தமிழ் மொழி இந்த நாட்டில் வாழுங்காலம்வரை பெரியார் திரு. வி. க. அவர்கள் நாட்டு மக்களின் உள்ளங்களில் இருப்பார். அதுபோலவே, தமிழ்ப் பெரியார் திரு. வி. க. அவர்களை மக்கள் நினைவுபடுத்திக்கொண்டு, அவர்தம் மேலான கருத்துக்களைப் பின்பற்றிச் செல்லும் காலம்வரையிலும் தமிழ் மொழியும் வாழும். திரு. வி. க. அவர்களின் கருத்தோவியங்களையும், நூல்களையும் படிப்பதின் மூலம் மாணவர்களும், ஆசிரியர்களும் தமிழ் மொழியைச் சிறப்பிக்க வேண்டும்."

என்று, முறையே முதல் அமைச்சர் காமராசர், மந்திரிகள் பக்தவத்சலம், சுப்பிரமணியம் ஆகியோர் சென்னை ஷெனாய் நகரில், சில தினங்களுக்கு முன்பு, திரு. வி. க. பள்ளித் திறப்பு விழாவின் போது பேசுகையில் குறிப்பிட்டிருக்கின்றனர்.

பள்ளிக்கூடம் காலஞ்சென்ற தொழிலாளர் தலைவர்—தென்றல் நிகர் தமிழ்ப் பெரியார் திரு. வி. க.-வின் நினைவு கூறுகிறது.

அந்தப் பள்ளியின் திறப்பு விழாவில் மாநில முதன் மந்திரியும், வேறு இரு 'கீர்த்தி' வாய்ந்த அமைச்சர்களும் கலந்து கொண்டிருக்கின்றனர்.

மாநில மந்திரிகள் அத்தகு ஒரு விழாவில் கலந்து கொள்வதே, 'பெரியார் திரு. வி. க. அவர்களின் நற்பணியை, நாட்டோர் மட்டுமின்றி நாடாள்வோரும் மதிக்கின்றனர்,' என்பதற்குச் சான்றாக அமைகிறது.

மேலும், விழாவில் பங்கு பெற்ற மந்திரிகள், திரு. வி. க. வின் கருத்துக்களை தாங்கள் ஏற்று செயல்படாவிடினும், நாட்டோர் ஏற்றுக்கொண்டு செயல்பட வேண்டும் என்பதிலே தங்களுக்குள்ள அக்கரை —அப்பெரியாரது கருத்துக்கள் நாட்டவருக்குத் தரக்கூடிய நல்ல பல பலன்களையும் மக்கள் பெற்று இன்புற வேண்டுமென்பதில் தங்களுக்குள்ள ஆர்வம்,—திரு. வி. க. அவர்களது வாழ்க்கை, தமிழர்களுக்கோர் எடுத்துக்காட்டாகும் என்பதில் தங்களுக்குள்ள பலமான நம்பிக்கை முதலியனவற்றை எல்லாம் தெள்ளத் தெளிய விளக்கிப் பேசியிருக்கின்றனர்.

இது, 'தெளி தேனில் சர்க்கரைப் பாகு சேர்த்தது போல் தானிருக்கிறது,' என்று, நாட்டவரில் சிலர் கூறுவர்.

சந்தனக் காட்டைக் கடந்து குளிரும் மணமும் பரப்பி மக்களை மகிழ்விக்க வருகிற தென்றலைப் போன்று, தீந்தமிழ் மொழியில் தித்திக்கும் வண்ணம் திரு. வி. க. அவர்கள் மொழிந்த கருத்துக்கள்,—நாட்டில் பரவிப் பயன்தர வேண்டுமென்பதில் சென்னை அரசியலாருக்கு இருக்கும் மட்டிலா பேரார்வத்தைக் காட்டவல்லது,—விழாச் சொற்பொழிவுகள், என்று கூறத் தோன்றலாம், வேறு சிலருக்கு!

ஆனால்.........!

திருச்சி மாவட்டக் கழக நிர்வாகத்தில் உள்ள பள்ளி ஒன்றில் திரு. வி. க.-வின் படம் திறக்கப்படுவதற்கு அனுமதி மறுத்திருப்பதோடு, சென்னை அரசாங்கத்தார், அந்த உத்தரவின் நகலை மாவட்டப் பள்ளிகள் அத்தனைக்கும் அனுப்பி வைத்திருப்பதாகத் தெரியவந்திருக்கிறது.

சென்னை மந்திரி சபையின் முதல்வரும், அவரது வலக்கரமும் இடக்கரமும், திரு. வி. க.-வின் திருப்பெயரால் உருவான பள்ளித் திறப்பு விழாவில், திரு. வி. க.-வின் கருத்துக்களைத் தூக்கிவைத்துக்கொண்டு ஆடிப்பாடியிருக்கின்றனர். அவர் பெயரால் பள்ளி; அங்கு, அவர் உருவப்படம்; இவற்றிற்குத் திறப்பு விழா—கோலாகலமாக! அதில் பங்கு பெற்றவர்கள், மாநில மந்திரிசபையின் 'மூலவர்'கள்! ஆனால், அவர்களுடைய சர்க்கார்—மந்திரிகள் போற்றித் திருத்தாண்டவம் பாடி ஏற்றித் தொழும் அதே திரு. வி. க.-வின் படத் திறப்புக்கு வேறு ஒரு இடத்தில் தடை விதிக்கின்றனர்! இச்செயல் சிந்தை நோகும் விந்தையாகவன்றோ இருக்கின்றது!

'தல நிர்வாக இலாகா மந்திரியின் உத்தரவாக அது இருப்பின், நாங்கள் என்ன செய்ய முடியும்?'—என்று, சென்னை விழாவில் கலந்துகொண்ட மந்திரிகள் கூறித் தப்பித்துக்கொள்ளவும் முடியாது; ஏனெனில் 'மந்திரிசபை முழுவதும் கூட்டுப் பொறுப்புடன் இயங்குவதாகும்,' என்ற இலக்கணம் வகுத்தவர்களும் அவர்கள் தானே!

பின், ஏன் இந்த முரண்பாடு?

கிராமப்புறங்களில் பறவைகளை அடித்து வீழ்த்தும் வீரர்கள், தாங்கள் பறவைகளின் கண்களில் படாமலிருக்க, ஆடு, கன்றுக்குட்டி முதலியனவற்றின் நிழலில் தம்மை மறைத்துக் கொண்டு தாக்குவார்கள் என்று கேள்விப்பட்டிருக்கிறோமே, அந்த முறையைத்தான், சென்னை அரசியலாரின் போக்கு நினைவூட்டுகிறது என்று நாட்டில் பேசிக்கொள்கிறார்கள். அது உண்மைதானா என்பதை, அமைச்சர்களின் பாராட்டுரையும், அரசாங்கத்தின் பாதகச் செயலும் சொல்லும்!

1957 பொதுத் தேர்தல்

திரு—கொச்சி, ஆந்திர மாநிலங்களில் நடைபெறாது

ஆந்திரா, திரு—கொச்சி, பெப்சு ஆகிய மாநிலங்களில் வருகிற 1957 ஜனவரியில் சட்டசபைகளுக்கான பொதுத் தேர்தல் நடைபெறாது என்று அறிவிக்கப்படுகிறது.

இடையில் வேறு ஏதாவது காரணத்தையொட்டி அந்த சட்டசபைகள் கலைக்கப்படலாமேயொழிய அவைகள் வருகிற 1959—60 வரையில் பதவியில் நீடித்திருக்கும்.

1957 ஜனவரியில் நடைபெற இருக்கும் பொதுத் தேர்தலின் போது இந்த மாநிலங்களில் பாராளுமன்ற உறுப்பினர் தேர்தல் மட்டுமே நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

1½ - கோடி டாலர் பெறுமான பொருட்களுக்கு தடை!

இரண்டாவது ஆட்சேபணை குறிப்பு

ஆப்கானிஸ்தானத்திற்கு செல்ல வேண்டிய பொருட்கள் அனைத்தும் பாகிஸ்தானில் தடுத்து நிறுத்திவைக்கப்பட்டிருப்பது குறித்து ஆப்கன் சர்க்கார், இரண்டாவது ஆட்சேபணைக் குறிப்பொன்றை பாகிஸ்தானுக்கு அனுப்பியுள்ளதாகவும், தேக்கி வைக்கப்பட்டுள்ள பொருட்களுக்குச் சேதமோ, நஷ்டமோ ஏற்படுமேயானால், அதற்கான நஷ்டஈடு கோர தங்களுக்கு உரிமை உண்டென்று அக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாகவும் பத்திரிகைக் குறிப்பொன்று அறிவிக்கிறது.

சென்ற மே மாதம் 13-ந் தேதியிலிருந்தே ஆப்கன்—பாகிஸ்தான் போக்குவரத்து தடுக்கப்பட்டு, அதனால் ஆப்கானிஸ்தானுக்குச் செல்ல வேண்டிய சுமார் 1½ கோடி டாலர் பெறுமானமுள்ள பொருட்கள் பாகிஸ்தானில் தேக்கப்பட்டுக் கிடப்பதாக ஆப்கன் தூதர் குறிப்பிட்டிருக்கிறார்.

இப்பொருட்களில் அயல் நாட்டு இயந்திரச் சாமான்களும் அடங்கியுள்ளன என்றும், மற்றும்பொருட்கள் வைக்கப்பட்டுள்ள பெட்டிகள் உடைக்கப்பட்டு அவை திருடப்பட்டோ, சேதமுற்றோ இருக்கலாம் என்றும் அவர் அறிவித்திருக்கிறார்.

கிராம மருத்துவமனை உதவியாளர்கள்

பாகுபாடு கூடாதென உத்தரவு

சென்னை, ஜூலை 14—

கிராமங்களிலுள்ள மருத்துவமனைகளில் பணியாற்றும் மருத்துவ உதவியாளர்களில் 'முதல் பிரிவினர்' என்றும், 'இரண்டாவது பிரிவினர்' என்றும் பாகுபாடு செய்யப்படுவது உடனடியாக நீக்கப்பட வேண்டும் என்று சென்னை சர்க்கார் உத்தரவிட்டுள்ளனர்.

இவ்வுத்தரவுப்படி, சர்க்கார் மானியத்துடன் நடைபெறும் கிராம மருத்துவ மனைகளில் உள்ள எல்லா மருத்துவ உதவியாளர்களுக்கும் ஒரே மாதிரியாக மாதம் ரூ. 40 ஊதியம் தரப்படும் என்று தெரிகிறது.

இதுவரையிலும் முதல் பிரிவு உதவியாளர்களுக்கு ரூ. 40-ம், இரண்டாவது பிரிவு உதவியாளர்களுக்கு ரூ. 35-ம் மாத ஊதியமாகத் தரப்பட்டு வந்தது.

'இடமனைத்தையும் குறிப்பிட்ட சிறுபான்மை வகுப்பினருக்கே தரப்பட்டுள்ளது'

'பின்தங்கிய சமுதாய மாணவிகள் இடமில்லை என விரட்டப்பட்டனர்'

'விதிகளை மீறும் நிர்வாகத்தின்மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்'

ஆசிரியர் பயிற்சிப் பள்ளி நிர்வாகத்திற்குக் கல்வித் துறையின் கண்டிப்பான எச்சரிக்கை

'பள்ளிகளில் பிள்ளைகளைச் சேர்ப்பதற்கான விதிகளை பள்ளி நிர்வாகிகள் மீறினால், மிகக் கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்,"

—என்று, சென்னை கல்வி இலாகா, செகண்டரி பிரிவு ஆசிரியர் பயிற்சி பள்ளி நிர்வாகிகளுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளதாகத் தெரிகிறது.

பள்ளியில் எந்த ஒரு வகுப்பாருக்கும், விகிதத்திற்கு அதிகமான இடம் தந்து, அந்த வகுப்பினரின் 'ஆதிக்கம்' ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டுமென்பதும் விதிகளுள் ஒன்றாகும்.

" நகரில் உள்ள ஒரு பயிற்சிப் பள்ளியில் சுமார் 70 சத விகிதத்திற்கும் அதிகமாக உயர்ந்த வகுப்பினருக்கு மட்டுமே இடம் தரப்பட்டிருப்பதாயும், அதனால் பல தாழ்த்தப்பட்ட —பின்தள்ளப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்களுக்குக்கூட இடம் கிடைக்கவில்லை என்றும் சர்க்காருக்கு தெரிய வந்ததாகக் கூறப்படுகிறது.

நகரில், தனிப்பட்டவர்களின் நிர்வாகத்தின்கீழ், அர்ச். கிறிஸ்தாபர், அர்ச். சூசையப்பர், அர்ச். ஆன், அவ்வை ஆதார நிலையம், சாரதா வித்தியாலயம் என்ற பெயரில் 5 ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் இருக்கின்றன.

ஒவ்வொரு பள்ளியிலும் 45 - மாணவிகள், முன் அனுமதியுடன் 50 மாணவிகள் பயிற்றுவிக்க அனுமதி தரப்பட்டிருக்கிறதாம்; இன்னும் அதிகமான மாணவிகளுக்குப் பயிற்சி தரவும் வசதி செய்யவும் வகையில் புது வகுப்புகள் திறப்பதற்குக் கோரப்பட்டால், அனுமதி தரப்படும் என்றும் கூறப்படுகிறது.

விகிதத்திற்கு அதிகமான வகையில், விதிகளுக்கு முரணாக, ஒரு வகுப்பினருக்கே அதிக இடம் வழங்கியிருக்கும் பள்ளிகள், தங்கள் தவறைத் திருத்திக் கொள்வதற்காகவே, சர்க்கார், விதிகளை நினைவூட்டி, சுற்றறிக்கை அனுப்பியிருப்பதாகவும் கூறப்படுகிறது.

பள்ளி நிர்வாகிகள், மீறக்கூடாத விதிகளின்படி நடந்து கொள்ள வேண்டுமென்பது மட்டுமன்றி, சேர்த்துக் கொள்ளப்பட்ட எந்த ஒரு உயர்ந்த வகுப்பு மாணவரையும், பள்ளியிலிருந்து விலக்கிவிட வேண்டுமென்று சர்க்கார் உத்தரவிடவில்லை என்றும் அறிய வருகிறது.

'மது அருந்துவதில்லை' என்ற உறுதிமொழி...

தருமாறு சர்க்கார் ஊழியர்கள் கோரப்படுவர்

" சர்க்கார் ஊழியத்திற்கு நியமிக்கப்படும் பணியாளர்கள், தாங்கள் வேலையில் அமரும் முன்னர் 'மது அருந்துவதில்லை' என்று 'உறுதிமொழி' எடுத்துக் கொள்ளவேண்டும்,"

என்று, மது ஒழிப்பு விசாரணைக் குழு, அண்மையில் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் கேட்டுக் கொண்டிருக்கிறது.

மேற்படி குழு முதலில் தயாரித்த இடைக்கால அறிக்கை ஒன்று தற்போது திட்டக் குழுவின் பரிசீலனையில் இருந்துவருவதாக அறிவிக்கப்படுகிறது. இன்னும் 3 வாரங்களுக்குள்ளாக அக்குழுவின் முழு அறிக்கையும் வெளியாகலாம் என்று தெரிகிறது.

தற்போது மதுவிலக்குச் சட்டம் அமுலிலில்லாத மாநிலங்களும், வருகிற அக்டோபர் 2-ந் தேதி முதல் மதுவிலக்கை அமுல் நடத்துவதற்கான ஆரம்ப நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

மதுவிலக்கு அமுலுக்கான ஆரம்ப நடவடிக்கையாக மாநில சர்க்கார்கள், பொது இடங்களில் மதுவருந்துவதைத் தடுக்கவும், உணவு விடுதிகள், கிளப்புகள் ஆகியவற்றில் மதுவகைகள் விற்கப்படுவதைத் தடுக்கவும் தடைச் சட்டங்கள் பிறப்பிக்கவேண்டும் என்றும், ஒருமுறை இத்தகைய முதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு விட்டால் பின்னர், மாநிலத்திலுள்ள மதுவகைக் கடைகளின் எண்ணிக்கையைக் குறைப்பதில் சர்க்காரின் வேலை குறையும் என்றும், அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

மேலும், மதுவகைகள் பற்றிய விளம்பரங்களை சர்க்கார் தடுக்க வேண்டுமென்றும், எந்த விதத்திலும்—சுகாதாரத்துக்காகவும்கூட மது வழங்கப்படுவதைத் தடை செய்ய சர்க்கார் முன்வர வேண்டுமென்றும், இவ்வாறு செய்வதால், ஆயிரத்திலொருவர்தான் தாம் வழக்கமாக உபயோகிக்கும் மது இல்லாமையால் இறக்க நேரிடும் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

எனினும், வெளிநாடுகளிலிருந்து இங்கு வரும் பிரயாணிகள் இந்த விதியினின்றும் விலக்களிக்கப்படலாம் என்றும் அக்குழுவினர் தம் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளனர்.

" இந்தியாவில் மதுவகைக்காக மட்டும் ஆண்டொன்றுக்கு ரூ. 140 கோடி செலவிடப்படுகிறது —அதிலும் குறிப்பாக, நாட்டிலுள்ள 10 சத விகித ஏழை எளியவர்கள்தான் செலவு செய்கிறார்கள். நாட்டின் அபிவிருத்திக்கான திட்டங்களுக்கு சர்க்கார், ஏழைகள் மூலம் கிடைக்கும் இந்த வருமானத்தை எதிர்நோக்கியிருப்பது விரும்பத் தக்கதல்ல; எனவே, நாடு முழுவதிலுமுள்ள எல்லா மாநிலங்களிலும் மது ஒழிப்பு அமுல் நடத்தப்பட வேண்டும். அதற்கு, இந்த மது ஒழிப்புத் திட்டம், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் நோக்கங்களுள் ஒன்றாகக் கருதப்பட வேண்டும் என்று இக்குழு கருத்தறிவிக்கிறது."

என்றும், அவ்வறிக்கை கூறியிருக்கிறது.

மது ஒழிப்பின் காரணமாகப் பாதிக்கப்படக் கூடியவர்களை, அவர்களது வேலையினின்றும் வேறு வகை வேலைகளுக்கு மாற்றி விடலாம் என்றும், அல்லது, அருந்த வீரியமுள்ள சாராயம் உற்பத்தி செய்ய மட்டுமே 'டிஸ்டில்லரி'கள் உபயோகப்படுத்தப்படவேண்டும் என்றும், கள் இறக்குவோர்களனைவரும் பதனீர் இறக்கும் தொழிலில் மட்டுமே ஈடுபடுத்தப்பட வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

1954—55-ம் ஆண்டில், இந்தியாவிலிருந்து ஏற்றுமதியான தேயிலையின் மொத்த மதிப்பு ரூ. 146,53,00,000.

ரூ. 471 கோடி திட்டங்களுக்கு பம்பாய் மந்திரி சபை அங்கீகரிப்பு

சில அம்சங்களின் செலவை திட்டக்குழு குறைத்தாலும் திட்டிய திட்டம் முழுவதையும் நிறைவேற்ற முயற்சி

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப் படுவதற்காக, ரூ. 471 கோடி மதிப்புள்ள திட்டங்களை பம்பாய் மாநில சர்க்கார் அங்கீகரித்துள்ளனர் எனத் தெரியவருகிறது.

திட்டக் குழுவின் பரிசீலனையில், இத்திட்டத்தின் சில அம்சங்களை நீக்கி, திட்டச் செலவுகளைக் குறைத்தாலும்கூட, பம்பாய் மாநில சர்க்கார், மேற்படி திட்டச் செலவு முழுவதையும் நிறைவேற்றுவதற்காகப் புதிய வரிகள் விதிக்கலாம் என்றும், அல்லது தற்போது இருக்கிற சில வரி விகிதங்களை உயர்த்தலாமென்றும் கூறப்படுகிறது.

குஜராத்தில் ஏற்படுகிற எதிர்ப்புகளைச் சமாளிப்பதற்காக, நர்மதா நதித் திட்டத்திற்கு ரூ. 3 கோடி முதல் 5 கோடி வரையிலும் செலவிட முடிவு செய்துள்ளதாம்.

அம்மாநில சர்க்கார், மொத்தமாக ஒவ்வொரு துறையிலும் செலவழிக்க உத்தேசித்துள்ள தொகை யாவன :—

பெரிய அளவு நீர்ப்பாசனத் திட்டங்கள், மின்சாரத் திட்டங்களுக்கு ரூ. 105 கோடி ; சாலை போக்குவரத்து அபிவிருத்திக்கு ரூ. 49 கோடி ; கல்வி வசதிகளை அபிவிருத்தி செய்து விரிவு படுத்துவதற்கு ரூ. 24.18 கோடி ; பொது சுகாதாரத் திட்டங்களுக்கு ரூ. 16 81 கோடி ; வீடு வசதிகளுக்கு ரூ 20 கோடி ; விவசாயத் துறைக்கு ரூ 21 கோடி ; கிராம குடிசைத் தொழில் அபிவிருத்திக்கு ரூ. 13 கோடி.

மொத்தத்தில், மாநிலத்தின் எல்லா துறையிலும் அபிவிருத்தி காணவேண்டுமென்பதே இத்திட்டத்தின் நோக்கமென்றும், எல்லா துறைக்குமாகச் செய்யப்பட்டுள்ள விரிவு படுத்தும் திட்டங்களனைத்தும் மேற்படி சிபாரிசில் அடங்கியுள்ளன என்றும் குறிப்பிடப்படுகிறது.

13 வாக்குசாவடிகளே ஏற்படுத்தப்படுமாம்!

இலங்கைக் குடிமக்களாகப் பதிவு செய்யப்பட்டோருக்கு தொல்லை?

வாக்குப் பதிவுக்கு 70 மைல் தூரம் செல்லவேண்டுமாம்

இலங்கைப் பிரதிநிதிகள் சபைக்கு, அடுத்த பொதுத் தேர்தலின்போது, இலங்கைக் குடிகளாகப் பதிவு செய்யப்பட்ட இந்தியர்களின் பிரதிநிதிகளாக 4 பேரைத் தேர்ந்தெடுக்க இலங்கை முழுவதிலும் 13 வாக்குச் சாவடிகளை ஏற்படுத்த இலங்கை சர்க்கார் முன்வந்துள்ளனராம்.

இலங்கை ஜனநாயகக் காங்கிரஸ், மேற்படி தேர்தலுக்கு 13 வாக்குச்சாவடிகள் போதாது என்றும், இக்குறைந்த அளவுக்குச் சாவடிகளை ஏற்படுத்துவதால் பதிவு செய்யப்பட்ட குடி மக்கள் தங்கள் தங்கள் வாக்குரிமையைப் பயன்படுத்திக் கொள்ள முடியாமற் போய்விடும் என்றும் எதிர்ப்பு தெரிவித்திருக்கின்றது.

சிற்சில பகுதிகளில், வாக்குச் செய்வதற்காக 70 மைல் தூரம் வரவேண்டியிருக்கும் என்றும் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

விஞ்ஞானிகளும் வேலையற்றுவிடுவர்?

பொத்தான்களை அழுத்தியதும் தானாகவே தொழிலகங்கள் இயங்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் இந்த நூற்றாண்டில், தொழிற்சாலைகளில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு 'சீட்டு'க் கிழிவது மட்டுமல்லாமல், எஞ்சினீயர்கள், விஞ்ஞானிகள் ஆகியவர்களுக்கும்கூட வேலையில்லாமற் போகக்கூடிய நிலைமை உருவாகக் கூடும்!

லண்டனிலுள்ள 'பெர்ட் அண்ட் டாட்லாக்' கம்பெனி, பல 'ஆட்டோமேடிக் (தானாக இயங்கும்) லாபரெட்டரி'களை ஏற்படுத்த இருக்கிறது!

எவ்வளவு அளவிற்கு உலகில் மின் அலையின் சக்தி இருக்கிறது என்பதை இந்த இயந்திரங்கள் வெகு விரைவில் கண்டுபிடித்து விடக் கூடுமாம்!

இந்தச் சாதனை, சாதாரணமாக மூன்று விஞ்ஞானிகளிடமிருந்து 3 நாள் வேலை வாங்கக் கூடியது என்றும் சொல்லப்படுகிறது!

வரவேற்பு இல்லையாம்!

சென்னைக்கு வர இருக்கிற டாக்டர் லோகியாவிற்கு வரவேற்பளிக்க சென்னை நகர ம. சோ. கட்சி எந்தவித ஏற்பாடும் செய்யவில்லை என்று நகர ம. சோ கட்சி செயலாளரான ஜி இராஜமன்னார் தெரிவித்திருக்கிறார்.

மகனை 'தத்தம்' செய்த தந்தையின் போக்கு!

புரோகிதருக்கு 5,000 ரூபாய் தட்சிணையாம்!

அமெரிக்கருடன் உணவருந்திய மகனின் செயல் கண்டு வருத்தம்

காட்மண்டு, ஜூலை 14—

இங்குள்ள ஒரு இலட்சாதிபதி, தனது ஒரே மகன், அமெரிக்கர்களுடன் உறவாடியதற்காக அவனை தனது மகனாக ஏற்றுக்கொள்ள நிராகரித்துவிட்டாராம்!

பட்டான் எனும் நகரத்தைச் சேர்ந்த காசி கணேஷ் தாஸ் எனப் பெயருள்ள அந்த இலட்சாதிபதி, தமது மகன் அமெரிக்கர்களுடன் கூடி உறவு கொண்டு அவர்களுடன் உணவு அருந்துவதையும், அமெரிக்கர்களுக்காக வேலை செய்ததையும் கண்டு மிகுந்த மனவேதனை கொண்டாராம் ; எத்தனையோ முறை தம் மகனைக் கண்டித்தும் அவன் கேட்கவில்லை என்றும், இதுபற்றி அவர் தமது 'குடும்பப் புரோகிதரை'க் கலந்தாலோசித்த பின்னர், தமது மகனை 'தத்தம்' செய்து விடுவதெனவும் முடிவு செய்து பாசுமதி நதிக்கரையில் 'தத்தம் செய்யும் சடங்கு'கள் நடத்தினர் என்றும், இந்தச் சடங்கு முடிவுற்றதும், இந்நிகழ்ச்சியைத் தம்முடைய உறவினர்களுக்கும், நகர மாஜிஸ்திரேட்டிற்கும் தெரிவித்துவிட்டார் என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

அவர், தமது மகனின் புகைப் படத்தை புரோகிதரிடம் கொடுத்துவிட்டு, அவருக்குத் 'தட்சிணை'யாக 5000 ரூபாயும் கொடுத்தாராம்!

இந்தோனேஷிய அரசியல் குழம்புகிறது!

மந்திரி சபை நிலை குலைகிறது!

ராணுவ தலைமை நியமனத்தை ஒட்டி தகராறு

ஜகார்தா, ஜூலை 14—

புதிய இராணுவத் தளபதி நியமனத்தை ஒட்டி எழுந்த மூன்று வார காலத் தகராறின் விளைவாக, இந்தோனேஷியாவின் 'மாஸ்கோ பயிற்சி' பெற்ற தற்காப்பு மந்திரியான ஐவாகுசுமாசு மந்திரி என்பார் தமது பதவியை இராஜினாமாச் செய்துவிட்டதாகத் தெரிகிறது.

இராணுவ விவகாரங்களில், அவர், அரசியல் ரீதியாகத் தலையிடுவதாக உயர்தர இராணுவ அதிகாரிகள் ஒன்று சேர்ந்து அவர்மீது குற்றஞ் சாட்டி வந்தனராம்.

மேஜர்-ஜெனரல் பாம்பெங் என்பாரை இராணுவ தளபதியாக நியமிப்பதை அந்த உயர்தர இராணுவ அதிகாரிகள் எதிர்ப்பதாயும், அவரது நியமனம், அரசியல் அடிப்படையில் செய்யப்பட்டிருப்பதாயும், திறமை, சேவைக்காலம், தலைமைக் குணம் ஆகிய இராணுவ அடிப்படையில் அமையவில்லை என்றும் அவர்கள் கூறுகின்றனராம்.

தற்காப்பு மந்திரியான சுமந்திரியின் இராஜினாமாவை அவர் சார்ந்திருக்கும் அரசியல் கட்சியான முற்போக்கு கட்சியினர் அறிவித்திருக்கின்றனராம்.

கட்சித் தலைவரான ஓட்டோ ரான்டு ஹூ என்பார், 'இராணுவ தகராறு' காரணமாக, மந்திரி சபையில் உள்ள தம் கட்சிப் பிரதிநிதி, இராஜிநாமா செய்வதாக பத்திரிகையாளரிடம் அறிவித்திருக்கிறார்.

மேஜர் - ஜெனரல் பாம்பெங் புடோ ஜோவின் நியமனத்தைத் தாங்கள் எதிர்ப்பதாக, இந்தோனேஷியாவை ஆள்பவர்கள் என்று கருதப்படும் 11 உயர்தர இராணுவ அதிகாரிகள் கடந்த ஜூன் 27-ந் தேதியன்று அறிவித்திருக்கின்றனர். அதனால் புடோ ஜோ தமது தளபதி பதவியை ஏற்றுக்கொள்ள இயலாது போய்விட்டிருக்கிறது.

தற்காலிகமாக தளபதி பொறுப்பிலிருக்கும் அதிகாரி, தனக்கு வழங்கப்பட்ட தற்காலிக பதவி நீக்க உத்தரவிற்கு கீழ்ப்படிய மறுத்துவிட்டார் என்றும், அவரது போக்கினை எல்லா இராணுவ அதிகாரிகளும் ஆதரிப்பதாகவும் கூறப்படுகிறது.

தற்காப்பு மந்திரியின் இராஜிநாமாவுக்குப் பிறகு, இந்தோனேஷிய மந்திரி சபை நிலைகுலைந்து காணப்படுகிறதாம்.

சர்க்காரை ஆதரிக்கும் வேறு இரு கட்சிகளும், மந்திரி சபையிலிருந்து தங்கள் கட்சிப் பிரதிநிதிகளை விலகிக் கொள்ளச் செய்யப் போவதாக அறிவித்திருப்பதை ஒட்டி, சர்க்காருக்கு உறுதியாக இருந்துவந்த பெரும்பான்மையான வாக்குகளின் எண்ணிக்கை பதினாறிலிருந்து பத்தாகக் குறைந்து விடும் என்று கூறப்படுகிறது.

தற்காலிக தளபதியாக இருக்கும் 31 வயதுடைய கர்னல் சுல்கிபிளியின் தலைமையில் ஒன்று சேர்ந்து பாம்பெங் நியமனத்தை எதிர்க்கும் இராணுவ அதிகாரிகள், தங்கள் அரசியல் பீடத்தில் நுழைய விரும்பவில்லை என்றும், ஆனால் இராணுவத்தில், அரசியல் தலையீட்டையும் தாங்கள் விரும்பவில்லை என்றும் தெரிவித்திருக்கின்றனராம்! இந்தோனேஷிய அரசியல், நெருக்கடி மிகுந்ததாகிக் கொண்டிருக்கிறது.

கோயில் அதிகாரிகளுக்கு நகரசபை உத்தரவு

கொசுக்கள் உற்பத்திக்கு இடமளிக்கக் கூடாதாம்

சென்னை, ஜூலை 14—

சென்னை மயிலாப்பூரிலுள்ள கபாலீசுவரர் கோயில், புரசைவாக்கத்திலுள்ள கங்காதீசுவரர்கோயில் ஆகியவைகளுக்குச் சொந்தமான குளங்களில் கிடக்கும் தாமரைக் கொடிகளையெல்லாம் அப்புறப்படுத்திவிடும்படி, மேற்படி கோயில் அதிகாரிகளுக்கு சென்னை நகர சபை உத்தரவிட்டுள்ளதாகத் தெரிகிறது.

மேற்படி குளங்களில் தாமரைக் கொடிகள் இருப்பதால், அக்குளங்களினின்றும் ஏராளமான கொசுக்கள் உற்பத்தியாகி, சுகாதாரத்திற்குக் கேடு விளைவிப்பதாலேயே அவற்றை அகற்றிவிடும்படி உத்தரவிட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

நகரசபையின் மேற்கண்ட உத்தரவுக்கு எதிராக ஆட்சேபணைகள் கிளம்பியுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

"இந்துக்களுக்கு, தாமரைக் கொடிகள் புனிதமானவை என்றும், எனவே அவற்றை மேற்படி குளங்களிலிருந்து அகற்றுவது கூடாது" என்றும் ஆட்சேபணைகளில் தெரிவிக்கப்பட்டிருக்கிறதாம்.

இதுதான் ஜனநாயகமா?

★

[வேறெல்லா இடங்களையும் போலவே, புதுவையிலும் காங்கிரஸ் ஆளவந்தார்கள் 'ஜனநாயக'த்திற்கு தங்களின் எதேச்சாதிகார வர்ணம் பூசிக்கொண்டிருக்கின்றனர்; 'பாரபட்சமற்ற நிர்வாகம் புதுவையில் நடைபெறுகிறது,' என்ற கூற்று 'வெறும் கேலிக் கூத்து' என்பதை விளக்க, இது ஓர் சான்றாகும்.—ஆர்.]

"21—6—55ல், தி. மு. கழகப் பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களை வரவேற்று ஊர்வலமாகப் பொதுக் கூட்ட மேடைக்கு அழைத்துச் செல்ல அரசியலாரை அனுமதி கோரி 8—6—55ல். தந்த விண்ணப்பத்திற்கு 19-6-55 வரை பதிலில்லை ; பன்முறை காரை நிர்வாகிகளைச் சந்தித்து கேட்டதற்கு, முடிவில், 'எந்தக் கட்சியினருக்கும் 23—7—55 தேர்தல் முடியும் வரை எவ்வித ஆர்ப்பாட்டத்திற்கும் ஊர்வலத்திற்கும் உத்திரவு கிடையாது' எனக் கூறிய அன்றைய நிர்வாகிகளே, இன்று, புதுவை மாவட்ட காங்கிரசின் ஊர்வலத்திற்கும், ஆர்ப்பாட்டத்திற்கும் அனுமதி அளித்துள்ளார்கள். கட்சிப் பாகுபாடின்றி ஒரே நிலையில் நின்று நிர்வாகம் செலுத்தவேண்டிய அரசாங்கம், இன்று ஒரு சாராருக்கு மட்டும் உத்திரவு கொடுத்தது ஏன்? இதுதான் ஜனநாயகமா?

"தடையை மீறினால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும்—என்று அன்று சொல்லிய அதிகாரிகள், இன்று, புதுவை மாவட்டக் காங்கிரசின் ஆர்ப்பாட்டத்திற்கு மட்டும் தடையை ஒத்திவைத்ததேன்? இது தான் மக்கள் ஆட்சியா? பொதுமக்களுக்காக பணிபுரியும் அரசாங்கமா? அல்லது புதுவை மாவட்ட காங்கிரஸ்காரர்களுக்காக அரசாங்கமா?"

என்று, காரைக்கால் தி. மு. கழகக் கிளை வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது.

தூக்கிலிடப்பட்ட 'மாடல்' அழகி!

லண்டன் மக்களின் துக்க ஒலி

பாரபட்சம் காட்டாதது கண்டு திகைப்பு

லண்டனில், தம்முடைய கணவனை துப்பாக்கியால் சுட்டுக் கொன்றதாகக் குற்றஞ்சாட்டப்பட்ட பெண்மணி ஒருவர் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டு, தண்டனையும் நிறைவேற்றப்பட்டு விட்டது.

தண்டனை விதிக்கப் பெற்றவர் 28 வயதுடைய ரூத்எல்லிஸ் என்ற பெயருடைய அழகுவாய்ந்த பெண்மணி என்றும், கொலைசெய்யப்பட்ட அவரது கணவர் பிளாக்லி என்ற பிரபல பிரிட்டிஷ் மோட்டார் பந்தய வீரர் என்றும் தெரிகிறது

தண்டனை நிறைவேற்றப்படுவதற்கு முன்னால், குற்றம் செய்தவருக்குக் கருணை காட்டவேண்டுமென்று பிரிட்டனிலும், மற்றும் இதர நாடுகளிலும் உள்ள பிரபல பத்திரிகைகளும், பிரமுகர்களும் இயக்கம் நடத்தினர் என்பது குறிப்பிடத்தக்கது.

தூக்குத் தண்டனை நிறைவேற்றப்பட்ட தினத்தன்று காலை சுமார் 8 மணிக்கு, சிறைக்கூடத்திற்கு வெளியே பெருந்திரளாக மக்கள் கூடி நின்றனர் என்றும். அக்கூட்டத்தினரில் ஒரு பிடில்காரர் மிக சோகமாக துக்கக் கீதம் ஒன்றை தமது இசைக் கருவியில் மீட்டினார் என்றும், அச்சமயத்தில் அங்கு குழுமியிருந்த பெண்கள் அனைவரும் துக்கந் தாளாமல் கண்ணீர் வடித்தனர் என்றும், காலை 8 மணிக்கு அவர் தூக்கிலிடப்பட்டார் என்றும் கூறப்பட்டுள்ளது.

ஓவியர்களும், சிற்பிகளும் படங்கள் வரைவதற்கும், சிற்பங்கள் செய்வதற்கும் இவர் 'மாதிரி'யாக இருந்தவர் என்றும், இவர் மீது தொடரப்பட்ட வழக்கில் பாரபட்சம் எதுவும் காட்டாமல் சட்டப்படி தீர்ப்பு நிறைவேற்றப்பட்டது காட்டையே திகைப்பில் ஆழ்த்தியுள்ளது என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

பிரிட்டனில் கடந்த 50 ஆண்டுகளில் 42 பெண்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது என்றும், அவர்களில் 33 பேருக்குக் கருணை காட்டப்பட்டது என்றும், கருணை காட்டப்பட்டவர்களில் யாருக்கும் அவர் சார்பில் கருணை கோரவில்லை என்றும் கூறப்பட்டிருக்கிறது.

கம்பள உற்பத்தி அதிகரிப்புத் திட்டம்!

நாடு 3 'மண்டலங்களா'கப் பிரிக்கப்படுமாம்!

கம்பள உற்பத்தியை அதிகரிக்கவும், நல்ல ரக கம்பள உற்பத்திக்குமாக மத்திய சர்க்கார் உணவு விவசாய இலாகா ரூ. 190 இலட்சம் செலவில் திட்டமொன்றைத் தயாரித்துள்ளதாகத் தெரிகிறது.

இத்திட்டப்படி அடுத்த 5 ஆண்டுகளில் 780 இலட்சம் ராத்தல் கம்பளம் உற்பத்தி செய்யப்படும்; தற்போது இந்த உற்பத்தி அளவு 520 இலட்சம் ராத்தல்தான்.

இந்தியா ஆண்டொன்றுக்கு ரூ. 68 கோடிக்குக் கச்சா கம்பளத்தை ஏற்றுமதி செய்கிறது. இத்திட்டத்தினால் செம்மறி ஆடு வளர்ப்பதையே தொழிலாகக் கொண்டிருக்கும் பல மக்களின் பொருளாதார நிலைமை அபிவிருத்தி அடையும் என்று கூறப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ், நாடு 3 'மண்டலங்களா'கப் பிரிக்கப்படுமென்றும், அயல் நாட்டு ஆடுகளைத் தருவித்து கலப்படம் செய்து வளர்ப்பது, 460 கம்பள நிறுவனங்களை ஏற்படுத்துவது, அபிவிருத்தி அடைந்த ரகங்களை குறைந்த விலைக்குக் கொடுத்துதவுவது, நல்ல வளர்ப்பு முறைகளைக் கற்றுக் கொடுப்பது, பரிசோதனைச்சாலைகளை அமைப்பது ஆகியவை அத்திட்டத்தின் முக்கிய அம்சங்களாக இருக்குமாம்.

மேற்படி திட்டத்தின் 4-வது ஆண்டு முடிவிற்குப் பின்னர், ஒவ்வொரு ஆண்டிலும் 13 இலட்சத்து 20 ஆயிரம் நல்ல ரகச் செம்மறி ஆடுகள் உற்பத்தி செய்யப்படும் என்றும் அறிவிக்கப்படுகிறது.

பொதுச் செயலாளர் தெளிவுரை!

[1-ம் பக்கத்தின் தொடர்ச்சி]

"ஐந்நூறு பார்ப்பனர்கள் கூடி 'கூடாது' என்று கூறியதும், 'சுவரொட்டிகள் ஒட்டுவதை நிறுத்து' என்று உத்தரவிடுகிற காமராசர் சர்க்கார்—ஐந்நூறு பேர்களின் கோரிக்கைக்கு உடன் செவி மடுக்கும் சர்க்கார், பல்லாயிரவர் குரல் எழுப்பி, பல நகர ஆட்சி மன்றங்கள், மாநாடுகள், பொதுக்கூட்டங்கள் ஆகியவற்றில் தீர்மானங்கள் நிறைவேற்றி, 'டால்மியாபுரத்தை கல்லக்குடியாக மாற்றுக' என்று கோரியதற்கு செவிமடுக்கவில்லை; 'கல்லக்குடி' என்ற அச்சிட்ட தாள்களை டால்மியாபுரத்தில் ஒட்டி, போராட்டம் நடத்தி, அங்கு போலீசார் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்திற்கு இருவரைப் பலி கொடுத்து, இத்தனைக்கும் பிறகு, 'கல்லக்குடி ஆக்குக' என்ற கோரிக்கையை எழுப்பும் நமது குரலுக்கு செவிமடுக்க காமராசர் சர்க்கார் முன்வரவில்லை; இது எதைக் காட்டுகிறது? காமராசர் சர்க்கார் தமது கோழைத்தனத்தைமட்டுமின்றி, யாருடைய குரலுக்கு மட்டும் தாங்கள் மதிப்பளிப்பவர்கள் என்பதையும் கூறவில்லையா?"

—என்று, பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், சென்னை-சேத்துப்பட்டில் நடைபெற்ற மும்முனைப் போராட்ட நினைவு நாள் விழாப் பொதுக்கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்

மும்முனைப் போராட்ட நினைவு நாளான ஜூலை 15-ந் தேதியன்று சென்னை சேத்துப்பட்டு 33-வது வட்ட தி. மு. கழக கிளையின் சார்பில் ஓர் மாபெரும் பொதுக் கூட்டம் நடைபெற்றது.

பல்லாயிரக்கணக்கான மக்கள் திரண்டிருந்தனர்.

கூட்டத்திற்கு சென்னை மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் இளம்பரிதி தலைமை தாங்கி, கடந்த 1953 ஜூலையில் கழகம் நடத்திய மூன்று போராட்டங்கள் குறித்தும் விளக்கம் தந்தார்.

பின்னர், தோழர் என். எஸ். வாசன் திராவிட நாட்டு வாழ்த்துப் பண் இசைத்ததும், தோழர் ஆர். டி. அரசு சிறிது நேரம் பேசினார்.

இறுதியாக கழகப் பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், நீண்டதோர் சிறப்புரை நிகழ்த்தினர். அவருக்கு கைத்தறி ஆடைகள் அணிவிக்கப் பெற்றன.

தலைவர் முடிவுரை கூற, கிளைக் கழகச் செயலாளர் நன்றி நவில கூட்டம் இனிது முடிவுற்றது.

★

தொடர்ந்து பொதுச் செயலாளர் அவர்கள் பேசியதாவது:—

"போராட்டங்களை நினைவுபடுத்தி, அந்தப் போராட்டங்களில் நாம் பெற்ற வெற்றிகளைக் கணக்கிட்டு, இனி நாம் தொடர்ந்து நடத்த வேண்டிய இலட்சியப் போராட்டங்களை எதிர்நோக்குவதற்காகத்தான் நாம் இந்த மும்முனைப் போராட்ட நினைவு நாள் கொண்டாடுகிறோம்.

நமது கழகத் தோழர்கள் சிந்திக்க வேண்டியதெல்லாம்—அல்லது கணக்கிட்டுப் பார்க்க வேண்டியதெல்லாம், மாற்றுக் கட்சியினர் நமது போராட்டங்களைப் பற்றியும், நம்மைப் பற்றியும் என்ன சொல்கிறார்கள் என்பதை அல்ல; மாற்றுக் கட்சியினர் நமக்கு மதிப்புரை தருவார்கள் என்று எதிர்பார்க்க முடியாது.

"ஆனால், கணக்கிட வேண்டியது, 'மக்கள் மன்றம் நம்மைப் பற்றி என்ன நினைக்கிறது,' என்பதைத்தான்!

நமது மும்முனைப் போராட்டங்களை மக்கள் ஆதரிக்காமலா இருந்தார்கள்? போராட்டங்களுக்குப் பிறகு மக்கள், நம் கழகத்திடம் காட்டும் அன்பையும், ஆதரவையும் குறைத்துக் கொள்ளவில்லை; போராட்டங்களுக்குப் பிறகு மேலும் மேலும் கழகம் வளர்ந்திருக்கிறது—வளர்ந்து கொண்டிருக்கிறது—பொலிவும், வலிவும் பெற்று!" என்று குறிப்பிட்டார்.

"அரசாங்கம் கோழைத்தனமாக, செய்த காரியத்தைத் தொடர்ந்து செய்ய அஞ்சி பின் வாங்கிய காரியத்தை நாம் வீரத்துடன் செய்திருக்கிறோம்; தீண்டாமை ஒழிப்புச் சட்ட விளக்கத்திற்காக, சர்க்கார் அச்சிட்டதைப் போலவே நாமும் புதிய விளக்கத்துடன் 5,000 சுவரொட்டிகள் அச்சடித்திருக்கிறோம்; நாடெங்கும் அதை ஒட்டப் போகிறோம்; அரசாங்கம் செய்யத் தவறிவிட்டதை நாம் செய்கிறோம்—அவசியமானது என்பதால்,"

என்று பொதுச்செயலாளர் அவர்கள் இறுதியாகக் குறிப்பிட்டார்.

சமுதாய நல அபிவிருத்தித் திட்டங்களுக்காக இந்திய சர்க்கார் 1955-ம் ஆண்டின் முதல் மூன்று மாதங்களில் மாத்திரம் மொத்தம் ரூ. 6,67,00,000 செலவு செய்துள்ளனர்.

பொதுக்கூட்டம்

17—7—55 மாலை 6½ மணிக்கு, ஆரணி, ஆரம்பப் பள்ளி மைதானத்தில், ஆரணி தி. மு. கழகச் சார்பில் நடைபெறும். தோழர்கள் ப. சுமணி, உமார், வெற்றிவீரன் ஆகியோர் பேசுவர்.

சொற்போட்டிக் கூட்டம்

வடசென்னை குறள் நெறிக் கழக உறுப்பினர்களுக்குள் சொற்போட்டிக் கூட்டம் 17—7—55 காலை 10 மணிக்கு, இராயபுரம் ஆதாம் சாயபு தெருவிலுள்ள கமலவிநாயகர் பாடசாலையில் திரு கு தியாகராசன் தலைமையில் நடைபெறும்.

மும்முனைப் போராட்ட நினைவு நாள்

★

கோவை

சிரியன் சர்ச் ரோடு திடலில்

17—7—55 மாலை 6 மணிக்கு

பேசுபவர்:

கி. மனோகரன்

★

சென்னை 2-வது வட்டம்

18—7—55 மாலை 6½ மணிக்கு, கல்மண்டபம் போலீஸ் நிலையத்திற்கு பின்புறமுள்ள கொழும்பு உணவு விடுதியின் மாடியில் தோழர் மு த இளஞ்சேரன் தலைமையில் நடைபெறும்.

சென்னை 19-வது வட்டம்

17—7—55 மாலை 5 மணிக்கு, ஸ்ரீபால்ய சரஸ்வதி சபா, நியூ பேரன்ஸ் ரோடில், தோழர் ஆ மாணிக்கம் தலைமையில் நடைபெறும்.

சென்னை 34-வது வட்டம்

17—7—55 மாலை 6 மணிக்கு, அங்கம்பாக்கம், எண் 29, இராம நாய்க்கன் தெரு, தி. மு கழகப் பணிமனையில் கூட்டம் நடைபெறும். கழகப் பணிமனையை தோழர் அ. பொ. அரசு துவக்கி வைப்பார்; தோழர்கள் வ. ச., வையத்தரசு சொற்பொழிவாற்றுவர்.

சென்னை 39-வது வட்டம்

17—7—55 காலை 10 மணிக்கு, கழகக் கட்டிடத்தில், தோழர் கா. வேங்கடவேந்தன் தலைமையில் கூட்டம் நடைபெறும்.

சென்னை—திருவல்லிக்கேணி

கே. எஸ். பாண்டியன் படிப்பகச் சார்பில், 17—7—55 மாலை 5 மணிக்கு, தோழர் கபிலன்-தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெறும். தோழர்கள் இளம்பரிதி, நெடுமாறன், நீலநாராயணன், எம். வே மணி, மா பா. சாரதி, மற்றும் பலர் பேசுவர்.

பம்பாய் பிரயாணிகள் அட்டகாசம்

கல்எறிந்து, கண்ணாடிகளைஉடைத்து மெத்தைகளுக்கு தீ மூட்டினராம்

பம்பாய்க்கு அருகில் உள்ள குர்லா இரயில் நிலையத்திலிருந்து புறப்பட்ட இரயில் வண்டி ஒன்றை, பிரயாணிகள் சிலர், பல தடவைகளில் அபாயச் சங்கிலியைப் பிடித்திழுத்து நிறுத்தியிருக்கின்றனர். இரயில்வே அதிகாரிகள் அதுபற்றி விசாரிக்கச் சென்ற போது, அவர்களைக் கற்களால் தாக்கியிருக்கின்றனர்.

பதினைந்துக்கும் அதிகமான இரயில்வே அதிகாரிகள் தாக்கப்பட்டிருக்கின்றனர்; நால்வர் படுகாயங்களுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனராம்.

குர்லா இரயில் நிலையத்திற்கு, மான்கர்டு எனுமிடத்திலிருந்து பம்பாய் செல்லும் பிரயாணிகள் வண்டி வந்து சேர்ந்தது; அப்போது இரயிலின் முன்பகுதி, பழுதுடையதாக இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டு, பின்னர், அந்தப் பகுதியல்லாத எஞ்சிய பகுதிகள் அடுத்த 'பிளாட்பாரத்'திலிருந்து வேறு சில பெட்டிகளுடன் இணைக்கப்பட்டு புறப்பட ஏற்பாடாகியிருந்தது.

வண்டி புறப்பட்டதும், பிரயாணிகள் தங்கள் அட்டகாசத்தைத் துவக்கியிருக்கின்றனர்.

இரயில்வே நிலைய அதிகாரியின் அறையின் கண்ணாடிக் கதவுகள் தூளாக்கப்பட்டது; உயர்தர வகுப்பு பெட்டி ஒன்றின் மெத்தை ஆசனங்களுக்கும் தீ மூட்டப்பட்டதாம்.

நகர இரயில்வே நிலைய போலீசாரின் துணையுடன் இந்த அட்டகாசங்கள் நிறுத்தப்பட்டனவாம்.

அதன் பிறகு போலீஸ் பாதுகாப்புடன் இரயில்கள் அவ்வழியே சென்று வருவதாகவும், நிலைமை இப்போது கட்டுக்கடங்கி இருப்பதாகவும் பிரயாணிகளின் அந்தப் போக்கிற்கான காரணம் தெளிவாகக் கூறப்படவில்லை என்றும் செய்திகள் கூறுகின்றன.

திட்டப் பகுதிகளில்...

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

6 மாத சிறைத் தண்டனையும்—பெரும் அபராதமும், இரண்டாவது முறை குற்றம் செய்வோருக்கு ஓராண்டு தண்டனையும் பெரும் அபராதமும் விதிக்கப்பட வேண்டும். இவ்வாறு ஒவ்வொரு தடவைக்கும் செய்யப்படும் குற்றத்திற்குத் தரப்படும் தண்டனை முன்னையதை விட இரட்டிப் பாக்கப்பட வேண்டும்,"

என்றும் அவ்வறிக்கையில் சிபாரிசு செய்யப்பட்டுள்ளது.

மாநில மருத்துவக் குழுக்களும், மாவட்ட மருத்துவக் குழுக்களும் இந்தியருக்கு மதுபான 'பர்மிட்'டுகள் கொடுக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

(முழு விவரம் 2-ம் பக்கத்தில் வெளியாகியுள்ளது.)

கபார்கான் பேசுகிறார்!

"மேற்குப் பாகிஸ்தானை ஒரே உறுப்பாக்கும் திட்டம் பற்றி 'எனது' மக்களைக் கலந்தாலோசித்த பின்னர் முடிவு தெரிவிக்கிறேன்."

என்று, எல்லைக் காந்தி கான் அப்துல் கபார்கான் பாக். அமைச்சர்களிடம் கூறியிருக்கிறாராம்.

சென்னை சர்க்காரின் 2-வது ஐந்தாண்டுத் திட்டம்

மாணவர்களுக்கு இலவசப் பகல் உணவு: ஆசிரியர்களுக்கு ஊதிய உயர்வு

நெய்வேலி நிலக்கரியின் துணை கொண்டு சிறிய-பெரிய தொழிற்சாலைகள் நிறுவ சிபாரிசு

சென்னை, ஜூலை 16—

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்படுவதற்கென சென்னை சர்க்கார் ரூ. 400 கோடி செலவில் திட்டங்கள் தயாரித்துள்ளது.

அத்திட்டங்களின் விவரம் பின்வருமாறு:—

பெரிய, நடுத்தரத் தொழில்களுக்கு ரூ 30 கோடி;

சிறிய கிராமத் தொழில்களுக்கு ரூ 40 கோடி;

கல்விக்கு ரூ. 45 கோடி.

இதர இனங்களில், விவசாயம், வனம், பால் பண்ணை, மீன் இயல் ஆகியவற்றிற்கு ரூ. 36 கோடி; நீர்ப்பாசனம், மின்சாரம் ஆகியவற்றிற்கு ரூ 33 கோடி; கூட்டுறவிற்கு ரூ 8 கோடி; பட்டுத் தொழில், தொழில் நுணுக்கக் கல்விக்கு ரூ. 2 கோடி; கைத்தறிக்கு ரூ. 9 கோடி; கிராம அபிவிருத்தி, உள்நாட்டுப் படகுப் போக்கு-வரத்துக்கு ரூ 20 கோடி; மருத்துவம், பொது சுகாதாரத்திற்கு ரூ. 22 கோடி; தண்ணீர் வினியோகத்திற்கு ரூ 23 கோடி; குடியிருப்பு வசதிக்கு ரூ. 6 கோடி; நகர அமைப்புக்கு ரூ. 9 கோடி; தாழ்த்தப்பட்டோர், மலைவகுப்பினர் ஆகியோர் முன்னேற்றத்திற்கு ரூ 5 கோடி; சமுதாய அபிவிருத்திக்கு ரூ 22 கோடி; தல அபிவிருத்திக்கு ரூ. 4 கோடி; தல நிறுவனங்களுக்கும் சென்னை நகர சபைக்கும் கடன் ரூ. 10 கோடி; பெண்கள் நலம், இளம் குற்றவாளிகளின் பள்ளிகள் விளம்பரம், மற்ற இனங்களுக்கு ரூ 2 கோடி.

'பெரிய தொழில்கள்' என்று குறிப்பிடப்பட்டிருப்பதில் ரூ. 10 கோடி செலவில் ஒரு அலுமினியத் தொழிற்சாலையும், ரூ 7 கோடி செலவில் ஒரு சோடா உப்பு உற்பத்திச்சாலை, காகித ஆலை, பீங்கான் சாமான்கள் உற்பத்திச்சாலை ஆகியவைகளும் அடங்கியிருக்கின்றன.

நெய்வேலியில் ஒரு இரசாயன உர (அலுமினியம் சல்பேட்) உற்பத்திச்சாலை ஏற்படுத்துவதற்கான யோசனையும் அத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறதாம்!

பெரும்பாலும் காகித ஆலை நீலகிரி அல்லது மலபாரிலும், பீங்கான் சாமான் உற்பத்தித் தொழிற்சாலை நெய்வேலித் திட்டப் பகுதியிலும், அலுமினியம் தொழிற்சாலை சேலத்திற்கு அருகிலும் நிறுவப்படலாமென உத்தேசிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிகிறது.

எந்தத் தொழிற்சாலையும் தனிப்பட்டவர் துறைக்கும் விடப்படும் என்றும், பொதுவாக எந்தெந்த தொழிற்சாலைகளை சர்க்கார் மேற்கொள்ளும் என்று தெரியாவிட்டாலும், பெரும்பான்மையான சர்க்கரை, சிமெண்ட் உற்பத்திச் சாலைகள் தனியார் நிறுவனங்களிடமே விடப்படுமென்பது நிச்சயம் என்றும் கூறப்பட்டிருக்கிறது. தனி நபர் துறைகட்கு ரூ. 20-கோடி வரையிலும் நிதி உதவி கிடைக்கலாம் என்று தெரிய வருகிறது.

இத்திட்டத்தில், கல்வித் துறையைப் பொறுத்த வரையில், மாணவர்களுக்கு இலவசப் பகல் உணவு கிடைக்கவும், ஆசிரியர்களுக்கு அதிக ஊதியம் தரப்படவும் வழி செய்யப்பட்டுள்ளதாம்! ஆனால், கல்வித் துறையில் இதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிற தற்போதைய தொகை, இது குறித்து அமைச்சர்கள் கூட்டத்திற்கு முன்னர் உத்தேசிக்கப்பட்டிருந்த தொகையை விட குறைவு என்று சொல்லப்படுகிறது.

ஜி. இராஜமன்னார் விலக்கப்பட்டார்?

சென்னை நகர ம. சோ. கட்சி தீர்மானம்

'சென்னைக்கு வர இருக்கும் ம. சோ. கட்சித் தலைவர் டாக்டர் லோகியாவை வரவேற்க எந்தவித ஏற்பாடும் நடைபெறவில்லை,' என்று அறிவித்த சென்னை நகர ம. சோ. கட்சியின் செயலாளர் ஜி. இராஜமன்னாரை பதவியிலிருந்து நீக்கவிடுவதென்று இன்று கூடிய சென்னை நகர ம. சோ. கட்சியின் நிர்வாகக் குழு தீர்மானம் ஒன்று நிறைவேற்றியிருப்பதாகத் தெரிய வருகிறது.

மேற்படி குழு, டாக்டர் லோகியாவின் சென்னை வருகையின் போது அவரை வரவேற்பதென்றும் முடிவு செய்துள்ளதாம்.

மேற்படி தீர்மானங்களையொட்டி, சென்னை நகர ம. சோ. கட்சியின் தற்காலிகச் செயலாளராக திரு ஜி. முராஹரி என்பவர் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

(முன்னைய செய்தி 3-ம் பக்கத்தில் வெளியாகியுள்ளது)

திருச்சியில் எம். ஆர். ராதா 'இராமாயண' நாடகம்

அண்ணா தலைமை தாங்கினார்

திருச்சி தேவர் மன்றத்தில், 10—7—55 மாலை 6-30 மணிக்கு, அண்ணா அவர்கள் தலைமையில், தோழர் எம். ஆர். இராதா அவர்களும், அவர்தம் குழுவினரும் நடிக்கும் 'இராமாயண' நாடகம் நடைபெற்றது. நாடகத்திற்குப் பெருந்திரளான மக்கள் வந்திருந்தனர். நாடகத்தில் வசூலான தொகையை ஏழை மாணவர்கள் கல்வி விடுதிக்குப் பயன்படுத்தப் போவதாக நிதிக் குழுவினர் கூறி, அண்ணா அவர்கட்கும், தோழர் இராதா அவர்கட்கும் மலர்மாலைகள் அணிவித்தனர். அண்ணா அவர்கள் தலைமையுரையாற்றினர். தோழர் இராதா நன்றி கூறினர்.

அகாலிதளக் கிளர்ச்சி தொண்டர்கள் விடுதலை

அமிருதசரஸ், ஜூலை 15—

பஞ்சாப் மொழிவழி மாநிலக் கோரிக்கைக் கிளர்ச்சியின் காரணமாக கைது செய்யப்பட்டு ஹிசார் எனுமிடத்தில் உள்ள சிறையில் வைக்கப்பட்டிருந்த 400 அகாலிகள் விடுதலை செய்யப்பட்டனர் என்று பத்திரிகைக் குறிப்பு ஒன்று தெரிவிக்கிறது.

இலங்கையில்......

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

குடியுரிமை வழங்கப்பட்டதென்றும் தெரிகிறது.

மொத்தம் 8 லட்சம் பேருக்கு மேல் இலங்கைக் குடியுரிமை கோரி மனுச் செய்துகொண்டனராம்.

இவ்வாண்டு மே திங்களில் 63 பேர் சம்மந்தமான 18 மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன என்றும், 7,355 பேர் சம்மந்தப்பட்ட 2,883 மனுக்கள் நிராகரிக்கப்பட்டன என்றும், 131 மனுக்கள் பைசல் செய்யப்படாமல் பாக்கி இருந்தன என்றும் கூறப்பட்டிருக்கிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன், எம். ஏ.